**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 04 ஆம் நாள் புதன்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. க.இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.184/2013** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | அன்வர் பாஷா | **வயது** | : | 66 |
| **த.பெ** | : | அப்துல் ஜலீல் | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | குண்ணத்தூர் | **தொழில்** | : | வேலை எதுவும் செய்யவில்லை. |

**04.02.2026 – வா.சா.1 குறுக்கு விசாரணை (1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை)**

1)நான் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை விசாரணை வாக்குமூலம் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டதா என்றால் இல்லை. முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு எதுவும் தெரியாதா என்றால் வக்கீல் படித்து சொன்னால் தான் எனக்கு தெரியும். அப்துல் ஜலீல் சாய்பு என் அப்பா என்றால் சரிதான். என் அப்பாவிற்கு பாபு என்ற மூத்த மகனும், நான் இளைய மகனும் ஆவேன் என்றால் சரிதான். என் அண்ணன் பாபு அவர்கள் 11.03.2011 ல் குடியாத்தத்தில் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். இறந்து போன என் அண்ணன் பாபுவிற்கு 1 ம் பிரதிவாதி மனைவி, 2,3 பிரதிவாதிகள் மகள்கள், 4 ம் பிரதிவாதி மகன் என்றால் சரிதான்.

2)5 முதல் 14 பிரதிவாதிகள் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது மனுபோட்டு பிரதிவாதிகளாக இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 5 முதல் 14 பிரதிவாதிகள் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 725/2018 என்ற வழக்கு என் மீதும், என் அண்ணன் பாபுவின் வாரிசுகள் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள **வா.சா.ஆ-1** கிரையபத்திரம் துரைசாமியிடமிருந்து என் தந்தை தாவாசொத்தை கிரையம் பெற்றது என்றால் சரிதான். **வா.சா.ஆ-1** ஆவணத்தின்படி சர்வே நெம்பர் 310/1 ல் 4.21 செண்டில் 2.20 செண்டும், சர்வே நெம்பர் 312/1 ல் 2.75 செண்டில் 0.25 செண்டும் கிரையம் என் தந்தை பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

3)என்னிடம் காட்டப்படும் **வா.சா.ஆ-3** ஆவணத்தின்படி என் தந்தை குமார் என்பவருக்கு சர்வே நெம்பர் 312/2 ல் ஏக்கர் 0.25 செண்டில் 0.12 செண்ட் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் **வா.சா.ஆ-4** ஆவணத்தின்படி என் தந்தை என் அண்ணன் பாபுவிற்கு சர்வே நெம்பர் 312/1 ல் ஏக்கர் 2.75 ல் என் தந்தைக்கு பாத்தியப்பட்ட 0.25 செண்டில் 0.13 செண்ட் செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். **வா.சா.ஆ-1** முன்னிலைக்கு என் அப்பா கிரையம் பெற்ற சொததுக்களை தவிர்த்து அருகில் உள்ள சொத்துக்களும் என் தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். **வா.சா.ஆ-10** ஆவணத்தின்படி 15.05.1990 ல் என்

தந்தை என் அண்ணனுக்கு சர்வே நெம்பர் 312/1 ஏக்கர் 2.75 ல் 0.70 செண்ட் சர்வே நெம்பர் 310/2 ல் ஏக்கர் 2.22 ல் 0.45 செண்ட் ஆக மொத்தம் 1 ஏக்கர் 18 செண்ட் உயில்எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான்.

4)அதே தேதியில் என் தந்தை என் அம்மாவிற்கு உயில் **வா.சா.ஆ-11** எழுதிகொடுத்துள்ளார் என்றால் என் தந்தை உயில்எழுதிவைத்திருக்கமாட்டார், போர்ஜரியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் ஆகும். **வா.சா.ஆ-11** பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் அது போர்ஜரி என்று நான் தான் நிரூபிக்க வேண்டும் என்றால் சரியல்ல. 04.10.1989 ல் என் தந்தை எனக்கு **வா.சா.ஆ-2** ஆவணத்தின்படி எனக்கு சர்வே நெம்பர் 312/1 ல் ஏக்கர் 1.25 செண்ட் எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் தந்தை சர்வே நெம்பர் 310/2 எ -வில் உள்ள வீட்டிற்கு எந்தவிதமான ஆவணமும் எழுதிவைக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான், ஆனால் என் தந்தை இப்பா கொடுத்தார், நான் 40 வருட காலமாக அனுபவித்துவருகிறேன்.

5)வாய்மொழியாக என் தந்தை வீடு எனக்கு கொடுத்துவிட்டார் என கூறுவது பொய் மற்றும் மேற்படி வீட்டில் என் அண்ணன் வாரிசுகளுக்கும் உரிமை உள்ளது என்றால் நான் வீட்டில் அனுபவித்துவருவதால் என் தந்தை எனக்கு இப்பா கொடுத்துவிட்டார் மேலும் என் அண்ணனிடம் நிறைய சொத்து இருப்பதால் என்னிடம் கொடுத்துவிட்டார். என் அப்பா எப்போது இறந்தார் என்றால் தேதி ஞாபகம் இல்லை. **வா.சா.ஆ-9** ஆவணத்தின் படி 12.11.2008 ல் நான் என் அண்ணனுக்கு சர்வே நெம்பர் 310/1 டி2 -வில் ஏக்கர் 0.54 ல் 0.52 செண்ட் கிரையம் எழுதிகொடுத்துவிட்டேன் என்றால் 1.25 ஏக்கரில் 0.52 செண்ட் நான் கிரையம் கொடுத்தேன். மேற்படி நான் கூறுவதுபோல் 1.25 ஏக்கரில் 0.52 செண்ட் நான் கிரையம் கொடுத்ததால் **வா.சா.ஆ-9** ஆவணத்தில் குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல.

6)வா.சா.ஆ-9 ஆவணத்தில் சக்குபந்தி உள்ளதா என்றால் எனக்கு தெரியாது, என் அண்ணனே எழுதிய ஆவணம் ஆகும், 0.52 செண்ட் கொடுத்தது உண்மை. என் அண்ணனுக்கு கிரையம்கொடுத்த 0.52 செண்ட் நிலத்தை என் அண்ணனுக்கு பிறகு அவரது வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதி மற்றும் 1 ம் பிரதிவாதி குடியாத்தத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் அண்ணன் மகள்கள் திருமணத்திற்கு பிறகு 2 ம் பிரதிவாதி பெங்களூரிலும், 3 ம் பிரதிவாதி சென்னையிலும் வசித்துவருகிறார்கள் என்றால் சரிதான். என் அண்ணன் வாரிசுகள் அனைவரும் ஊரில் இல்லாததை பயன்படுத்தி நான் என் அண்ணனுக்கு கிரையம் கொடுத்த 0.52 செண்டில் 0.5 செண்டை நான் குமாருக்கு கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் நான் மேற்படி 0.52 செண்டிலிருந்து 0.5 செண்டை குமாருக்கு கிரையம் கொடுக்கவில்லை, என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட 25 செண்டை என் அண்ணனுக்கு பத்திரம் மூலம் எழுதிகொடுத்துவிட்டார், மேலும் மேற்படி 25 செண்டில் என் அப்பாவே குமாருக்கு எழுதிகொடுத்துவிட்டார், மீதம் உள்ள 13 செண்டில் என் அண்ணன் என்னிடம் 13 செண்டில் 5 செண்ட் இப்பா மூலமாக எனக்கு கொடுத்துவிட்டார்.

7)நான், மற்றும் என் மனைவி தாஹிரா பேகம், மகள்கள் சகிலா, சபானா, ஆயிசா மகன் முபாரக் பாஷா ஆகியோர் சேர்ந்து மேற்படி 5 செண்டை குமாருக்கு எழுதிகொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். என் அண்ணனுக்கு சேரவேண்டிய 5 செண்டை நான் குமாருக்கு

எழுதிகொடுத்துவிட்டதால் தான் அதில் உரிமைகேட்டு என் மீது அசல் வழக்கு எண் 158/2013 வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆகையால் நான் தாக்கல் செய்த பாகபிரிவினை வழக்கு தேவையற்றது என்பதால் தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல. குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2026.02.06 10:43:42 +0530

District Munsif,
Polur.